முற்பகல் 10-25

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய அங்கன்வாடி மையம் திறப்பதற்கு ஊரக மற்றும் நகர்ப்புற பகுதியாக இருப்பின், குறைந்தபட்ச மக்கள்தொகை 400 ஆகவும், அதிகபட்ச மக்கள்தொகை 800 ஆகவும் இருத்தல் வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிற கருங்கண்ணன் குடியிருப்பிலுள்ள மக்கள் தொகை 265 ஆகும். மக்கள்தொகை குறைவாக இருப்பதால் அங்கே புதியதாக அங்கன்வாடி மையம் அமைக்க இயலவில்லை. இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறு அங்கன்வாடி மையம் கேட்டிருக்கிறார்கள். மத்திய அரசின் வழிகாட்டுதலின்படி நடக்கக்கூடிய இந்த அங்கன்வாடி மையங்களில், தற்போது குறு அங்கன்வாடி மையம் அமைக்கக்கூடாது என்று மத்திய அரசு நாக்கீது அனுப்பியிருக்கிறது. ஆகவே, அருகிலே இருக்கக்கூடிய அங்கன்வாடி மையத்தோடு கருங்கண்ணன் குடியிருப்பில் இருக்கக்கூடிய குழந்தைகளை இணைத்து ஒன்று சேர்ப்பதற்கு மக்களின் முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி நடக்கிற இந்த அரசு நிச்சயமாக ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தங்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 49, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

49—

கல்வியியல் கல்லூரி

***29279—திரு. க. அன்பழகன்:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கும்பகோணத்தில் புதிய கல்வியியல் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் தொகுதியில் புதிய கல்வியியல் கல்லூரி தொடங்குவது குறித்த கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன் அவர்கள்.*

திரு. க. அன்பழகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கும்பகோணம் தொகுதி, சுற்றிலும் நிறைய கிராமங்கள் இருக்கிற தொகுதியாகும். இங்கு அரசு ஆடவர் கல்லூரி மற்றும் பெண்கள் கல்லூரிகள் இருக்கின்றன. இவை மிகவும் புகழ்வாய்ந்த கல்லூரிகளாகும். கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் பயில்பவர்கள் கல்வியியல் படிக்க தனியார் கல்லூரிகளை நாடவேண்டிய நிலை உள்ளது. பொருளாதாரத்தில் பின்தங்கிய நிலையில் உள்ள ஏழைக் குடும்பத்தைச் சார்ந்த மாணவர்கள் மிகவும் சிரமப்படுகின்றனர். எனவே, இந்த மாணவர்களின் நலனைக் கருத்தில்கொண்டு, கல்வியியல் கல்லூரியைத் துவக்க அரசு முன்வருமா என மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தைப் பொறுத்தவரையில், 7 அரசு கல்வியியல் கல்லூரிகள் இருக்கின்றன. 14 அரசு உதவிபெறும் கல்வியியல் கல்லூரிகள் இருக்கின்றன. 651 சுயநிதி கல்வியியல் கல்லூரிகள் இருக்கின்றன. ஆக மொத்தம், தமிழகத்தில் 672 கல்வியியல் கல்லூரிகள் இருக்கின்றன. குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், இந்தியாவிலேயே அதிகமான கல்வியியல் கல்லூரிகளைக் கொண்ட மாநிலம், மக்களின் முதல்வர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழிநடத்தும் மாநிலம்தான் என்பதை இந்த நேரத்தில் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

மேலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தங்கள் பகுதியில் கல்வியியல் கல்லூரியைத் தொடங்க வேண்டுமென்ற கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். கல்வியியல் கல்லூரியில் மாணவர்களின் சேர்க்கையைப் பொறுத்தவரையில், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் எவ்வளவு மாணவர்கள் தேர்ச்சி பெறுகிறார்களோ, அவர்கள் விரும்புகிற காலகட்டத்தில் அவர்களுக்கு வேண்டிய இடங்கள், அரசாங்கத்தின் மூலமாக நடைபெறும் கல்வியியல் கல்லூரிகளில் ஏற்கெனவே அதிகமாக இருக்கின்றன. அதனால், புதிய கல்வியியல் கல்லூரி தொடங்குவதற்கான வாய்ப்பு தற்போது இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன் அவர்கள்.*

திரு. க. அன்பழகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தமிழகத்திலே எத்தனை கல்வியியல் கல்லூரிகள் இருக்கின்றன என்பதைக் குறிப்பிட்டுச் சொன்னார்கள். நான் என்னுடைய தொகுதியில் அரசு கல்வியியல் கல்லூரி இல்லை என்பதைத்தான் இங்கே குறிப்பிடுகிறேன். கும்பகோணம் தொகுதியிலுள்ள அரசு ஆடவர் கல்லூரி புகழ்வாய்ந்த கல்லூரியாகும். அந்தக் கல்லூரி, 'தென்னகத்து கேம்பிரிட்ஜ்' என்று நம் தலைவர் அறிஞர் அண்ணா அவர்களால் புகழப்பெற்ற கல்லூரியாகும். அந்தக் கல்லூரியில் கல்வியியல் துறையைத் தொடங்க வாய்ப்பு இருக்கிறதா என்பதைத் தெரிந்துகொள்வதற்காக இந்தக் கேள்வியைக் கேட்டேன். குறிப்பாக, வேதியியல் துறை, இயற்பியல் துறை மற்றும் புவியியல் துறை போன்றவை அந்த ஆடவர் கல்லூரியில் இருக்கின்றன. அதைப்போல, கல்வியியல் துறையையும் அந்தக் கல்லூரியில் துவங்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாகவே, தமிழகத்தில் ஒரு கல்லூரியைத் தொடங்க வேண்டுமென்று சொன்னால், கிராமங்கள்*

எங்கு இருக்கின்றனவோ, ஏழையெளிய மாணவர்கள் உடனடியாக கல்லூரியில் சென்று சேரமுடியாத சூழ்நிலை எங்கு இருக்கிறதோ, பொருளாதாரத்தில் பின்தங்கிய மாணவர்கள் எங்கு இருக்கிறார்களோ, தமிழகத்தில் கல்லூரிப் படிப்பிற்காக தொலைதூரம் நடந்து செல்லக்கூடிய சூழ்நிலை எங்கு இருக்கிறதோ, அதுபோன்ற இடங்களில்தான் மக்களின் முதல்வர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கடந்த மூன்றரை வருட ஆட்சிக் காலத்தில் இதுவரையில் 53 கல்லூரிகளைத் தந்து பெருமை சேர்த்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த வகையிலே, தஞ்சாவூர் மாவட்டத்தைப் பொறுத்தவரையில், மக்களின் முதல்வர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பேராவூரணியிலே ஒரு கலை மற்றும் அறிவியல் கல்லூரியைத் தந்து பெருமை சேர்த்திருக்கிறார்கள். செங்கிப்பட்டி கிராமத்திலே பொறியியல் கல்லூரியைத் தந்து பெருமை சேர்த்திருக்கிறார்கள். கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகத்தைத் தந்து அந்த மாவட்டத்திற்குப் பெருமை சேர்த்திருக்கிறார்கள். வேளாண்மைக் கல்லூரியைத் தந்து அந்த மாவட்டத்திற்குப் பெருமை சேர்த்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த வகையிலே தஞ்சாவூர் மாவட்டத்தைப் பொறுத்தவரையில், இதுபோன்ற மிகப் பெரிய திட்டங்களையெல்லாம் தந்து, கல்வித் துறைக்கு மிகப் பெரிய பெருமையைச் சேர்த்த சிறப்பு, மக்களின் முதல்வர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களைச் சாரும் என்பதை இந்த நேரத்தில் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 11-30)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு அவர்கள்.

திரு. ப. டில்லி பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமீபத்தில், மத்திய அரசு கல்வியியல் கல்லூரிப் படிப்பு இரண்டாண்டுகள் என்றும், சில தனியார் கல்லூரிகளுக்கு 50 இருக்கைகள் என்றும் அறிவித்திருப்பதாக அறிந்தேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள்கூட, 7 அரசு கல்வியியல் கல்லூரிகள் கடந்த 20 ஆண்டுகாலமாக இருக்கின்றன என்று சொன்னார்கள். ஆக, அரசு புதியதாக கல்வியியல் கல்லூரியைத் தொடங்கும்பட்சத்தில், மாணவர்களுடைய சேர்க்கை அதிகரிக்கப்படுமா அல்லது

[2015 பிப்ரவரி 23

இரண்டாண்டு கல்விப் படிப்பு நீட்டிக்கப்படுமா? தமிழக அரசிடம் எத்தகைய செயற்குறிப்பு இருக்கிறது? மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியதைப்போல், தமிழகத்திலே கல்வியறிவில் மிகவும் பின்தங்கிய பகுதிகள், தருமபுரி, கிருஷ்ணகிரி போன்றவையாகும். கிருஷ்ணகிரியில் ஒரு கல்வியியல் கல்லூரியைத் தொடங்கும்பட்சத்தில், சுற்று வட்டாரங்களில் இருக்கக்கூடிய இரண்டு, மூன்று மாவட்டங்களுக்கு ஏதுவாக அமையும். அந்த அடிப்படையிலே, கிருஷ்ணகிரியிலே அரசு கல்வியியல் கல்லூரியைத் தொடங்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்களின் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்வியியல் கல்லூரியைப் பொறுத்தவரையில், நாம் ஏற்கெனவே கடைப்பிடித்து வருவது ஓராண்டு படிப்பு மட்டும்தான். ஆனால், சமீபத்தில், தேசிய ஆசிரியர் கல்விக் குழுமம், National Council for Teacher Education (NCTE), 2014 ஆம் ஆண்டு regulation ஒன்றை வெளியிட்டிருக்கிறது. இந்தியாவில் இருக்கக்கூடிய அனைத்துக் கல்வியியல் கல்லூரிகளும் ஒரு வருடப் படிப்பு என்பதை இரண்டு வருடப் படிப்பாக மாற்றியமைக்க வேண்டுமென்ற ஒரு கருத்தை வெளியிட்டிருக்கிறார்கள். இதுசம்பந்தமாக, ஏற்கெனவே மக்களின் முதல்வர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழிநடக்கும் அரசைப் பொறுத்தவரையில், இடீரென்று ஒரு வருடம் என்பது இரண்டு வருடம் ஆகிறபோது, அங்கே நாம் கட்டட வசதியை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும், ஆசிரியர்களின் எண்ணிக்கையையும் நாம் உயர்த்திக் கொடுக்க வேண்டும். இதுபோன்ற பிரச்சினை இருக்கின்ற காரணத்தால், இதை உடனடியாக ஓராண்டுக்குள் நிறைவேற்ற முடியாது. அதற்குக் கால அவகாசம் வேண்டும். தேசிய கவுன்சிலைப் பொறுத்தவரையில், 2015-2016 ஆம் ஆண்டே இதைத் தொடங்க வேண்டுமென்று ஆணை வழங்கியிருக்கிறது. அதாவது, அடுத்த ஆண்டு வருகிற கல்வியாண்டிலேயே தொடங்க வேண்டுமென்று ஆணை வழங்கியிருக்கிறார்கள். ஆனால், இந்த அரசைப் பொறுத்தவரையில், உடனடியாகத் தொடங்குவதற்கு வாய்ப்பில்லை. இதனை

2016-2017 ஆம் ஆண்டிலிருந்து தொடங்கலாம் என்ற ஒரு கருத்துருவை அனுப்பியிருக்கிறோம்.

அதோடுமட்டுமல்லாமல், தமிழ்நாடு சுயநிதிக் கல்வியியல் கல்லூரியினுடைய கூட்டமைப்பு, உயர் நீதிமன்றத்தை அணுகியிருக்கிறது. உடனடியாக நாங்கள் செய்வதற்கு சிரமம் ஏற்படுகிறது, ஆகவே, இதுபோன்ற திட்டத்தைக் கைவிட வேண்டுமென்று அவர்கள் உயர் நீதிமன்றம் சென்றிருக்கிறார்கள். அதற்கான விசாரணை நாளை, 24-2-2015 அன்று வர இருக்கிறது. ஆகவே, இது நீதிமன்றத்திலே இருக்கிறது. அந்த வகையிலே பார்க்கிறபோது, இதை எடுத்துக்கொள்கிற காலகட்டத்தில், நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையில், மாநிலத்திலே இருக்கக்கூடிய மாணவ, மாணவிகள் அதிகமாகக் கல்வி பயின்று, வெளி மாநிலங்களுக்கு, வெளிநாட்டுக்குக்கூட வேலைக்குச் செல்லக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. ஆக, பொதுவாகவே அவர்களுக்கு அந்தத் தகுதி வேண்டுமென்று சொன்னால், இதைக் கடைப்பிடித்தாக வேண்டிய ஒரு சூழ்நிலையும் இருக்கிறது. ஆகவே, இதையெல்லாம் கருத்திற்கொண்டு, கால அவகாசம் கேட்டு, மத்திய அரசுக்கு மக்களின் முதல்வர் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, ஒரு வேண்டுகோள் விடுத்திருக்கிறது.

அதோடுமட்டுமல்லாமல், தனியார் ஆசிரியர் கூட்டமைப்பும் உயர் நீதிமன்றத்தை அணுகி இருக்கிறது. அதுவும் நாளை விசாரணைக்கு வருகிறது. அந்த விசாரணைக்குப் பின்பு, இதுபற்றி அரசு முடிவெடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கல்வியியல் கல்லூரி ஒன்றைத் தொடங்க வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள். தமிழகத்தைப் பொறுத்தவரையில், 7 அரசு கல்வியியல் கல்லூரிகள் இருக்கின்றன. 57 ஆண்டுகளாக, இதுவரையிலும், கல்வியியல் கல்லூரி என்பது அரசு சார்பாக திறக்கப்படவே இல்லை. இருந்தாலும், இந்தப் புதிய சட்டதிட்டத்தை அமல்படுத்துகிறபோது, இதுபற்றி மாண்புமிகு மக்களின் முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கா. ராமச்சந்திரன் அவர்கள்.*

திரு. கா. ராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி மலை மாவட்டத்தில் வருடா வருடம் சற்றேறக்குறைய 6,000 மாணவ, மாணவிகள் +2-வில் தேர்ச்சி பெறுகிறார்கள். ஆனால், அவர்கள் கல்லூரி சென்று படிப்பதற்கு போதிய வசதி இல்லாமல் இருக்கிறது. 3,000 பேர் படிக்கின்ற அளவுக்குத்தான் அங்கே கல்லூரிகள் உள்ளன. மீதமுள்ள 3,000 பேர் வேறு மாவட்டங்களுக்குச் சென்று படிக்க வேண்டிய சூழ்நிலை உள்ளது. இதில் பாதிக்கும் மேற்பட்டவர்கள் தோட்டத் தொழிலாளர்களுடைய குழந்தைகளாவர். அவர்கள் நிதி நெருக்கடி காரணமாக, கல்லூரிப் படிப்பையே நிறுத்திவிடுகின்றார்கள். நீலகிரி மாவட்டத்தில் கல்லூரிகள் குறைவாகவுள்ளது. என்னுடைய தொகுதியான குன்னூரில் அரசு கலைக் கல்லூரியோ அல்லது பொறியியல் கல்லூரியோ இதுநாள்வரை தொடங்கப்படவில்லை. அங்கு கலைக் கல்லூரி அல்லது பொறியியல் கல்லூரி கட்டுவதற்கு, குன்னூர் தொகுதியின் மையப் பகுதியில் 'பர்லியார்' என்ற இடத்தில், குன்னூர் நகராட்சியின் கட்டுப்பாட்டில் 40 ஏக்கர் நிலம் உள்ளது. ஆகவே, அந்தப் பகுதியில் ஒரு பொறியியல் கல்லூரி அமைத்துத் தர அரசு முன்வருமா எனக் கேட்டு அமர்கிறேன்.*

முற்பகல் 10-35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொறியியல் கல்லூரியைப் பொறுத்தவரையில், நான் ஏற்கெனவே பலமுறை இந்தச் சட்டமன்றத்தில் சொல்லியிருக்கிறேன். தமிழகத்திலே 577 பொறியியல் கல்லூரிகள் இருக்கின்றன. 2,92,042 மாணவ, மாணவிகள் சேர்ந்து படிப்பதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. ஆனால், 1,67,082 மாணவர்கள்தான் சேர்ந்து படிக்கக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. மாணவர் சேர்க்கைக்கான 1,24,960 இடங்கள் மீதி இருக்கின்றன. ஒரு பொறியியல் கல்லூரி தொடங்க வேண்டுமென்று சொன்னால், 100 கோடி ரூபாய் தேவைப்படுகிறது. தொடரும் செலவு, தொடராச் செலவு என்று 100 கோடி ரூபாய் அளவுக்குத் தேவைப்படுகிறது. நீலகிரி மாவட்டத்தைப்*

பொறுத்தவரையில், வனத் துறையினுடைய நிலங்கள் அதிகமாக இருக்கின்ற காரணத்தினால், நிலம் கையகப்படுத்துவது சிரமமாக இருக்கிறது. இந்தச் சூழ்நிலையில், மக்களின் முதல்வர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கிராமப்புறங்களிலே இருக்கக்கூடிய ஏழை எளிய மாணவர்கள் பயன்பெற வேண்டுமென்ற நோக்கத்தோடுதான் இதுவரையில் இல்லாத அளவிற்கு 4 பொறியியல் கல்லூரிகளைத் தந்து தமிழகத்திற்குப் பெருமை சேர்த்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) பொறியியல் கல்லூரியில் சேர்ந்து படிப்பதற்கான இடங்கள் ஏற்கெனவே கூடுதலாக இருக்கின்ற காரணத்தினால், புதியதாக ஒரு பொறியியல் கல்லூரியைத் தொடங்க வேண்டுமென்ற கருத்துரு அரசிடம் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 50 மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.சி. ஆறுக்குட்டி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

50—

அலுவலகக் கட்டடம்

***3923—திரு. வி.சி. ஆறுக்குட்டி:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர் (வடக்கு) வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கோயம்புத்தூர் (வடக்கு) வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்கு சொந்தக் கட்டடம் மற்றும் ஓட்டுநர் தேர்வுத்தளம் அமைக்க நிலம் தேர்வு செய்யும் பணி நடைபெற்று வருகிறது. உரிய இடம் தேர்வு செய்யப்பட்டபின் மக்களின் முதல்வர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின்